


வாய்க்காலின் குறுக்கே அமைந்துள்ள 9.0மீ அகல சிறுபாலத்திற்கு செயற்பொறியாளர், நீ.வ.து. கீழ்பவானி வடிநிலக் கோட்டம், ஈரோடு. கடிதம் எண்.வ.3/கோ.107/370m/2024 நாள்:09/08/2024-ன் தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது.

ஆ உதவி	ஸ்வரி
வரைவா	நகன்
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை II	கோ.கண்ணன்

Signature valid
Signed by: Assistant Director
Location: Erode
Date: 2024.11.04 [illegible]

Signature valid
Signed by: Village Panchayat President
Location: Erode
Date: 2024.09.24 [illegible]:42

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்

புதூர் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், புதூர் ஊராட்சி, புதூர் "அ" கிராமம், ரீ.ச.எண்: 141/3B -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (அரசால் மறு ஆய்வு ஒப்புதல் அளிக்கப்பட்ட ஈரோடு முழுமைத்திட்டத்தில் முதன்மை குடியிருப்பு (PR-5) உபயோகத்தில் அமைந்துள்ளது).

இணைய வழி விண்ணப்பம் எண்: ZCZVF6Q6

அளவு : 1"அங்குலம் = 33'0" அடி (அ) (1:400) (ALL DIMENSIONS ARE IN METER)

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 5750.00 சமீ (அ) 1.42 ஏக்கர்
கோரிய மனைகள் : 23
ஒதுக்கிய மனைகள் : 24
மனைப்பிரிவின் எல்லை ----------
நிலையிலுள்ள சாலை ----------

பொது ஒதுக்கீடுகள் :-

மனைப்பிரிவின் சாலை : 1845.29 ச.மீ
பூங்கா ஒதுக்கீட்டிற்கான பரப்பு : {மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு} x 10%
: {5750.00 - 1845.29} x 10% = 390.47ச.மீ (மனுதாரரால் அரசு வழிகாட்டிமதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

பொது உபயோகம் : {மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு} x 0.5%
வேண்டிய பரப்பு : {5750.00-1845.20} x 0.5% = 19.52 ச.மீ

பொது உபயோகம் (A) : 21.50 ச.மீ (0.55%)

(சாலை மற்றும் பொது உபயோகம்(A) தான ஆவண எண்:7258/2024 நாள்:04/10/2024-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்காக **உள்ளாட்சிக்கு** தானமாக **ஒப்படைக்கப்பட்டவை:**

பொது உபயோகம் (B) : 22.40 ச.மீ (0.57 %)

(பொது உபயோகம்(B) தான ஆவண எண்:7257/2024 நாள்:04/10/2024-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)

கட்டிட வரம்பு :

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்
9.0மீ-க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு:

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள்

1. அரசாணை எண்-18 நதி மற்றும் குநீ.வ துறை நாள் 04.02.2019 (மு) அரசாணை எண்-16 நதி மற்றும் குநீவ துறை நாள் 31.01.2020 ன் படி மனைப்பிரிவு சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும், 0.5% பூமி TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீ.வ (ம) நவ.து. நாள் 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீரேந்தக தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், புதூர் ஊராட்சி தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் / விடுதலினிறி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம், மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
9. மனைப்பிரிவின் உள்ளே மின்னழுத்த கம்பிபாதை செல்லுமாயின் அதனை மனுதாரர் தனது சொந்த செலவில் சாயையின் போக்கிற்கு மாற்றி அமைத்த பின்னரே (அ) நீக்கிய பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்து பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
11. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதி மன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கல்ல.
12. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமைபும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
13. மனைப்பிரிவின் எல்லையில் நீர்நிலை அமைந்துள்ளதால் அதனை ஒட்டியுள்ள மனைகளுக்கு 3.0மீ அகல கட்டிடம் கட்ட தடை செய்யப்பட்ட பகுதியாக விடல் வேண்டும்.
14. மனைப்பிரிவில் ஊடே நீர்நிலை அமைபுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாத வன்னம் மனைப்பிரிவு அமைக்கப்படல் வேண்டும். இதனை உள்ளாட்சி உறுதி செய்தல் வேண்டும்.
15. மனைப்பிரிவினை உள்ளாட்சி இறுதி ஒப்புதல் மற்றும் RERA ஒப்புதல் பெற்ற பின்னரே மனை விற்பனை செய்யப்படல் வேண்டும்.

SWP / DTCP / ERODE / LAYOUT APPROVAL NO : 311 /2024
SWP / DTCP / ERODE LPA/ PLANNING PERMISSION NO : 30 /2024

உறுப்பினர் செயலர்/ துணை இயக்குநர் (பொ),
ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்/மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.